

# தமிழ்மொழி ஆண்டு 4

## எனக்கு ஒரு விநோத மேசை கிடைத்தால்.........

அப்பா வாங்கித்தந்த ஆங்கில மர்மக் கதை புத்தகம் ஒன்றனை அன்றுதான் வாசித்து முடித்தேன். அடேயப்பா! ________________ எத்தனை விநோதங்கள்.... எத்தனை மர்மங்கள்.... என் மனதிலும் ஓர் ________________தோன்றியது. எனக்கு ஒரு விநோத மேசை கிடைத்தால்... ஆம்! எனக்கு ____________________ மேசை கிடைத்தால் ஒவ்வொரு நாளும் உண்ணும் நேரத்தின் போது பலவகையான _________________ அம்மேசை மீது தயாராக இருக்கும்படி செய்வேன். இதனால், தினமும் ஓய்வில்லாமல் வீட்டு வீட்டு வேலைகள் அனைத்தையும் செய்யும் என் _______________ சற்று ஓய்வு கிடைக்குமல்லவா!

என் குடும்பத்தினர் அனைவரும் ஒன்றாக அமர்ந்து _______________ உணவுகளைச் சுவைக்க வேண்டும். உண்டபின் விநோத மேசை மீண்டும் முன்பைப்போல் காட்சியளிக்க வேண்டும். நான் விரும்பிய ______________ எல்லாம் என் விநோத மேசை உருமாற வேண்டும். நான் பள்ளி செல்லும் போது என் விநோத மேசை மீது ________________ பறந்து செல்ல வேண்டும். பள்ளியை அடைந்ததும் விநோத மேசை தனது ________________________ மடக்கிக் கொள்ள வேண்டும். இதனால், நான் வாகன நெரிசலில் சிக்கிக் கொண்டு தவிக்க நேரிடாது அல்லவா!

ஓய்வு நேரத்தில் என்னை ஏற்றிக் கொண்டு என் விநோத மேசை வானத்தில் பறக்க வேண்டும். இறைவன் படைத்த ___________________ அழகை நான் கண்டு இரசிக்க வேண்டும். எனக்குக் கிடைத்த விநோதமான இந்த மேசையைக் கண்ணும் கருத்துமாய் நான் காத்திட வேண்டும்.

| | | | | |
|---|---|---|---|---|
| உருவத்தில் | இயற்கை | விநோத | இறக்கைகளை | தாயாருக்கு |
| அறுசுவை | எண்ணம் | அமர்ந்து | கதையில் | உணவுகள் |

LIVEWORKSHEETS